2014 டிசம்பர் 4]
11—

கூடுதல் கட்டடம்

***47669— திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலை தெரிவிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி கால்நடை மருத்துவமனையில் மேற்கொண்டு கூடுதல் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். துறை ஆய்வு செய்து பார்த்ததில், அங்கே கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு அதிகமான இடவசதி இருக்கிறது. எனவே, எப்போதும், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளிலே கால்நடை பராமரிப்புத் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் எங்கள் துறைக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தருவார்கள். அப்போது தங்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் இருக்கக்கூடிய அந்தக் கால்நடை மருத்துவமனை ஒரு*

தாலுகா மருத்துவமனையாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அருகில் இருக்கக்கூடிய வேலூர், வரம்பியம், நெடும்பள்ளம் ஊராட்சிகளும், அதேபோல திருத்துறைப்பூண்டி நகரத்தில் இருக்கக்கூடிய 24 வார்டுகளைச் சேர்ந்த கால்நடைகளுக்கும் அங்கேதான் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆகவே கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கிளை மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க முடியாத சூழல் ஏற்படுகிறபோது, இந்த மருத்துவமனையைத்தான் பயன்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல் போக்குவரத்துச் சாலை உயரமாக இருக்கிறது. இந்த மருத்துவமனை தாழ்வாக இருக்கிறது. ஆகவே மழைக் காலங்களில் அங்கே குளம்போல் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய சூழல் இருக்கின்றது. ஆகவே அதை மாற்றவேண்டும் என்பதற்காகத்தான் அங்கே ஒரு புதிய மருத்துவமனைக் கட்டடமும், மருத்துவர்கள் தங்குவதற்காக ஒரு குடியிருப்பையும் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்களின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 2015-2016 ஆம் நிதியாண்டில் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அங்கே சிறிய பிராணிகள் சிகிச்சைக்கூடம், நுண்கதிர் பிரிவு (எக்ஸ்ரே யூனிட்) ஆய்வுக்கூடம் ஆகியவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஆண்டாங்கரை, எழிலூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்று சொன்னால் மருதவனம், ஒதியத்தூர், திருத்துறைப்பூண்டி, கச்சனம், பொன்னிறை மற்றும் திருநெல்லிக்காவல் ஆகிய கிராமங்களுக்குச் செல்லவேண்டிய சூழல்*

2014 டிசம்பர் 4]

இருக்கிறது. ஆகவே, ஆண்டாங்கரை, எழிலூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும் ஒரு கால்நடை கிளை மருத்துவமனையைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள கிராமங்களையெல்லாம் எங்களுடைய துறை சார்பாக ஆய்வு செய்து, விதிகளுக்கு உட்பட்டு இருக்குமானால், அங்கே நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், குடியிருப்பு கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் அரசுமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தக் கேள்வி, எங்களுடைய துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*